அவர்கள் தொழில் நிலை பிரிவுகளின் கிடைக்கும் தன்மை, மாவட்டத்தின் வெற்றிடங்கள், புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட பிரிவுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கக்கூடிய இயலுமை, சேவை மேம்பாடு மற்றும் செலவு வினைத்திறன் ஆகியவற்றுக்காக புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளின் உண்மையான அவசியம் என்பவற்றை கருத்திற் கொள்ள வேண்டும். புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட பிரிவுகளுக்கு மனித வளத்தையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் (RDHS) இணக்கப்பாடு பெறப்படுதல் அவசியம்.

3. புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளுக்கு தொழில் நிலை பிரிவுகளை பெற்றுக்கொள்ள ஒப்புதல்.

   புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட பொ.சு.ம (PHM) பிரிவுகளுக்கு எப்போதும் அதற்கேற்ற தொழில்நிலை பிரிவுகளின் ஒப்புதல் அவசியமாகும். RDHS அணி, வருடாந்த பொ.சு.ம (PHM) தொழில்நிலை பிரிவின் மீளாய்வுக்கான புதிய தொழில்நிலை பிரிவுகளின் முன்மொழிவை உள்ளடக்கி மாகாண சுகாதார சேவை அதிகாரிகள், நிர்வாகம் மற்றும் தொழில் நிலை பிரிவுகள் ஆணைக்குழு ஆகியவற்றின் சம்பந்தபபட்ட மாகாண ஒப்புதல்களை பெற வேண்டும்.

4. புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளின் பிரகடனம்

   பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், தொழில் நிலைப் பிரிவுகளின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மட்டுமே புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளை பிரகடனம் செய்தல் வேண்டும். மாவட்டத்தின் புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளுக்கான மட்டுப்படுதப்பட்ட ஒப்புதல் கிடைக்கப்பெறுமாயின், மாவட்ட அல்லது மாகாண ச.ம.ஆ (CCP – District / Province) மற்றும் தா.சே.ந.சு.வை.அ (MOMCH) ஆகியோர் பி.சு.சே.ப (RDHS) க்கு முன்னுரிமை பிரிவுகளின் பட்டியல் ஒன்றை தயாரிரிக்க உதவ வேண்டும்.

5. புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளின் செயற்பாடு

   பி.சு.சே.ப (RDHS), பதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளின் செயற்பாடு எப்போது ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை பொ.சு.ம (PHM) கிடைக்கப்பெறும் இயலுமையைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டும். புதிய பொ.சு.ம (PHM) பிரிவு நிறுவப்பட்டு செயற்பட தொடங்கியவுடன் அதனை e-RHMIS இல் உடனடியாக உள்வாங்க குடும்ப சுகாதார பணியகத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகிற்கு, பி.சு.சே.ப (RDHS) ஒப்பமிட்ட கடிதம் மூலம் தெரியப்படுத்தல் வேண்டும்.

6. புதிதாக நிறுவப்பட்ட பிரிவுகளின் அத்தியாவசிய செயற்பாடுகள்